**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 354** **நாள் : 04.08.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள நூலகத்துடன் கூடிய முதல்வர் படைப்பகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்துவது குறித்து அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள நூலகத்துடன் கூடிய முதல்வர் படைப்பகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்துவது குறித்து அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.08.2026) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காணொலிக் காட்சியின் வாயிலாக, வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., (வடக்கு), மண்டல அலுவலர்கள், தமிழ்நாடு தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் மாவட்ட நூலக அலுவலர்கள், மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நூலகத்துடன் கூடிய 16 முதல்வர் படைப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாநகராட்சியின் சார்பில் 8 முதல்வர் படைப்பகங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

முதல்வர் படைப்பகங்களை பயனாளர்கள் சிறப்பாக பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் பயனாளர்களுக்கான சேவைகளை மேம்படுத்துதல், நூலகத்துறையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், இப்படைப்பகங்களைத் தொடர்ந்து பராமரிப்பதற்குத் தேவையான பாதுகாவலர், தூய்மைப் பணியாளர், வரவேற்பாளர் உள்ளிட்ட பணிகளுக்குத் தேவையான பணியாளர்களை நியமித்து தொடர்ந்து பராமரித்தல், இணையதள வசதி (Wifi Facility) மற்றும் இது தொடர்பாக தமிழ்நாடு தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனத்தின் (ITCOT) மூலம் மேம்படுத்துவது குறித்து ஆலோசனைகள் பெற்று, அதனடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து ஆணையாளர் அவர்கள் விரிவாக ஆலோசனை மேற்கொண்டு அறிவுரைகள் வழங்கினார்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலகம்,
பெருநகர சென்னை மாநகராட்சி